19 NOV 1971
...ATE LIBRARY

# பலாலி விமானநிலையம் விஸ்தரிக்கப்படும்

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி. எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 280

யாழ்ப்பாணம் கார்த்திகை 4 ஷவ்வால் 1 சனிக்கிழமை (20-11-71)

## அதிபார விமானங்கள் இறங்குவதற்கு வசதி

யாழ்ப்பாணம், சனி
பலாலி விமான நிலையத்தை அரசாங்கம் விஸ்தரித்து அபிவிருத்தி செய்யவிருக்கிறது. இதன் மூலம் வெளி நாடுகளிலிருந்து இலங்கை ஊடாகச் செல்லும் அதிபார விமானங்கள் பலாலியிலும் தங்கிச்செல்ல வசதியேற்படும்.

இவ்வகை விமானங்கள் தமது பிரயாணத்தின்போது இதுவரை கட்டுநாயக்க பண்டாரநாயகா சர்வதேச விமான நிலையத்தில் தரித்துச் சென்று வந்தபோதிலும் காலநிலை சீரில்லாத வேளையில் இவை சென்னை நிலையத்திற்குத் திருப்பி விடப்படுகின்றன. பலாலி விமான நிலையம் விஸ்தரிக்கப்பட்டு அபிவிருத்திவேலைகள் பூர்த்தியானதும் இலங்கை வரும் விமானங்கள் காலநிலை சீரில்லாதபோது வேறு நாடொன்றுக்குத் திருப்பி விடப்படாமலே பலாலியில் இறங்குவதற்கு வசதியேற்படும்.

### எதிர்காலத்தில்

# பிரதேச அடிப்படையில் பட்ஜட் தயாரிக்கப்படும்

## ஆட்சிமன்றத்தில் பீலிக்ஸ் தகவல்

கொழும்பு, வெள்ளி
எதிர்காலத்தில் பிரதேச அடிப்படையில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் என்றும், இது தொடர்பாக மந்திரிசபை முடிவொன்றை எடுத்துள்ளது என்றும் பொது நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

புதிய வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு திரு. பீலிக்ஸ் உரை நிகழ்த்தினார்.

இப்பொழுது நாடு முழுவதிலும் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு என்ற முறையில் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. இம்முறையை மாற்றி இனிமேல் பிரதேச ரீதியாக வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படவேண்டும்.

உதாரணமாக ஹிங்குராக்கொட உள்ளூராட்சிப் பிரதேசத்துக்கெனக் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு என்ற முறையில் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படவேண்டும். இப்படி ஒரு பிரதேசத்துக்கென ஒதுக்கப்படும் நிதி அப்பிரதேசத்துக்கும் பயன்படுத்தப்படாவிட்டால் இன்னொரு பிரதேசத்திற்கு பயன்படுத்தக்கூடாது. இப்படிச் செய்தால்தான் அப்பகுதி மக்களும் பிரதிநிதிகளும் தங்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதென அறிந்து வேலைத்திட்டங்களுக்கு உழைப்பர். பிரதேச ரீதியாக வரவு-செலவுத் திட்டம் தயாரிக்க மந்திரிசபை முடிவுசெய்துள்ளது என்று திரு. பீலிக்ஸ் தெரிவித்தார்.

ஒரு பகுதியின் மக்கள் தொகை, பின்தங்கிய பகுதியா, இல்லையா என்ற நிலைமை போன்றவற்றைக் கருத்திற்கொண்டே எதிர்காலத்தில் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் என்றும் பகுதிக்குப் பகுதி ஓரிரு லட்சம் ரூபாய்கள்தான் வித்தியாசம் ஏற்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இப்பொழுது இங்கு சம்பிரதாயம் பற்றிப் பேசுகிறார்கள். இது வீண்பேச்சு. 1962ம் ஆண்டு டாக்டர் என். எம்., கொல்வின்,

(5ம் பக்கம் பார்க்க)

## மரவரிமுறை ஒழிப்புக்கு காந்திசேவா சங்கம் ஆதரவு

யாழ்ப்பாணம், சனி
'மக்கள் அரசாங்கத்தின் 2-ம் வரவு செலவு திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து மரவரி திட்டத்தை நீக்கி தவறணை அமைக்கும் திட்டத்தை புகுத்தியிருப்பதை வரவேற்கின்றோம். இதன் மூலம் இலங்கை முழுவதற்கும் பொதுவான மதுவரி பாலன கொள்கையை அரசாங்கம் வகுத்துள்ளது.

அகில இலங்கை காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை பிரதமருக்கும், நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவுக்கும் அனுப்பியுள்ள தந்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தவறணை முறைபற்றி வேலாயுதபிள்ளை அடுத்து தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மாத்திரம் இவ்வளவு காலமும் மரவரி திட்டம் இருந்தது. இது வீடுவீடாக கள்ளு தவறணை இருக்க அனுமதித்து அனைவரும் கள் குடிக்கச் செய்து பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் இழக்க வழிவகுத்தது. இதனால் அநேக தீங்குகள் ஏற்பட்டது. அது மாத்திரமல்ல, மரவரித் திட்டத்தால் நாட்டற்ற இந்திய சீவல் தொழிலாளர்தான் அதிக வருவாயை அடைந்தனர் என்பது மாத்திரமல்ல, சமூக விரோத குடிபேற்றம் நடக்கவும் வாய்ப்பானது.

தவறணை முறைவருமானால், இலங்கையர்தான் கள்ளுச் சேர்த்துக் கொடுப்பார்கள். தவறணைகளை கூட்டுறவுமுறையில் அமைப்பதும் வரவேற்கத் தக்கது. கள்குடிப்போரும், கள்சேர்போரும் சேர்ந்து கூட்டுறவு முறையில் தவறணைகளை நடத்தலாம். இந்த கூட்டு

[6ம் பக்கம் பார்க்க]

## நாட்டின் வளம் மக்களுக்கு பயன்தர வேண்டும்

கோட்டை, வெள்ளி
உலகில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு ஏற்ப நாமும் அபிவிருத்தியைச் செய்யவேண்டும். இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் தாது வளர்ச்சியடைந்த மனித சமுதாயத்தின் எல்லாப் பகுதிகளையும் பாதித்துள்ளது.

இவ்வாறு இந்திய நீர்ப்பாசன மின்சார அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் கொழும்பு சமுத்திரா ஹோட்டலில் பொறியியலாளர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், நாட்டில் வளங்கள் இருப்பது முக்கியமல்ல, அவ்வளங்களை மக்களின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்துவதுதான் முக்கியமானது. வளங்களை அபிவிருத்தி செய்து அதனை மக்களுக்குப் பயன்படுத்துவதுதான் பொறியியல் என்றார்.

### தமிழ்-சிங்களப்

## பிரதேசம் என்று பிரித்துப் பேசுவதில் அர்த்தமில்லை

ரத்னாயக்கா

நாட்டில் பயங்கரவாத செயல்கள் இன்னும் ஓரிரு ஆண்டுகளுக்கு இருக்கத்தான் செய்யும். இந்த பயங்கரவாதிகளை முகாம்களில் வைத்திருப்பதற்கு ஒரு நாளைக்கு 30 ஆயிரம் ரூபாவை அரசாங்கம் செலவு செய்கிறது என்று இன்று வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆட்சிமன்ற விவகார அமைச்சரும் விளையாட்டுத் துறை அமைச்சருமான திரு கே. பி. இரத்னாயக்கா கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் அக்கராயன்குளம் இலங்கைப் பிரதேசம். தமிழ்ப்பிரதேசம் சிங்களப் பிரதேசம் என்று பிரித்துப்பேசுவதில் அர்த்தமில்லை அடுத்தமாதம் 25-ம் திகதி அக்கராயன்குளம் மஹியங்கனை ஆகிய இடங்களில் புனர்வாழ்வு முகாம்கள் அமைக்கப்படும். இவற்றோடு சேர்ந்து நாட்டில் 12 புனர்வாழ்வுமுகாம்கள் இருக்கும். ஜனவரி பெப்ரவரியில் பயங்கரவாதத்தில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டவர்களில் பலர் விடுதலை செய்யப்படுவார்கள். மிகுதிப்பேர் விசாரிக்கப்பட்டு புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்படுவார்கள் என்றார்.

### மரவள்ளி ஏற்றுமதியால்

## அந்நியச் செலாவணி சம்பாதிக்கலாம்

—மார்ட்டின்

கொழும்பு, வெள்ளி
பணக்காரர்களை ஏழைகளாக்குவதற்கல்ல, ஏழைகளை பணக்காரர்களாக்குவதற்கு வரவுசெலவுத் திட்டம் உதவிபுரிய வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சி. எக்ஸ் மார்ட்டின் ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

திரு மார்ட்டின் தொடர்ந்து பேசுகையில் இலங்கையிலிருந்து மரவள்ளிக் கிழங்கை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்க முடியும், நாவாந்துறை இவ் விஷயத்தில் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். மீன்பிடியாளர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம் கொண்டுவர வேண்டும் என்று கடந்த 5 ஆண்டுகளாக நான் கேட்டுவந்திருக்கிறேன். மீன்பிடியாளர்களுக்கென இன்சூரன்ஸ் திட்டத்தையும் அவர்களுக்கென பயிற்சித் திட்டங்களையும் ஏற்படுத்தியமைக்காக நான் நிதி அமைச்சரைப் பாராட்டுகிறேன் என்றார்.

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், சில்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜின் களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெசின் கொம்பனி. 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3709

மணி மார்க் வரகு அரிசி குரக்கன் மா என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள். மொத்தமாக வாங்கி ஏமாறு வீர்கள். P. முத்தையா, வசந்தா இண்டஸ்றீஸ், நாவலடி லேன், வண் மேற்கு, யாழ்ப்பாணம். 3706

கலவித நவநாகரிக மிகைகளும், கோழித்தீனி வகைகளும் மருந்துச்சரக்குகளைகளும், வெவ்வேறு யந்திரங்கள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மனோன்மணி மில், 46/1 பிரவுண் ரோட், யாழ்ப்பாணம். 3694

### வைத்தியம்

வாதம், இரத்தி, தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். கவிப்புரம் (D. A. M.) தங்க மாளிகை வைத்திய சாலை, இராசாவீதி, நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம். 3748

உழுந்தம் கருப்பு விளாமரத்தில் அதிக இலாபம் அடைய குறைந்த கூலியில் உழுந்து உடைத்துக்கொடுக்கப்படும். நேரில் அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். முகமதி இரைண்டிம் மில், 443, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 3754

### விற்பனைக்கு

ராதாதமுதிரஞ்ஞசரஞ் சன்பாவாணிதாம்பூலப்பிரியர்களுக்கும் பீடா தயாரிப்பாளருக்கும் அத்தியாவசியமானது. வாய்க்கு ருசியையும் தாம்பூலத்திற்கு சுவையையும் கொடுக்கும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, கொழும்பு, யாழ்ப்பாணம். 3708

### தேவை

கண்ணாடி வகைகள் ஊது வோரும் உதவியாளரும் குமிழ் போடுவோரும் (Blowers Helpers Bubbers) தேவை. திறமைக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். 25-11-71 க்கு முன் விண்ணப்பிக்கவும். பிறிலியன்ற் கண்ணாடித் தொழிற்சாலை, ஆனைக்கோட்டை. 3753

## 'வெங்காயத்தை கைப்பற்றியது நாம்தான்'

செம்பியன்குண்டு, வெள்ளி பூநகரி இராணுவ முகாமிலிருந்து சார்ஜன் ஜே. எம். புகாரி எழுதுவதாவது:

'இம் மாதம் 5ம் திகதி வெளியான 'ஈழநாடு' இதழில் சங்குப்பிட்டி துறைமுகத்தில் 40 அந்தர் வெங்காயமும் அதை ஏற்றிவந்த ஓட்டியையும் சுங்கக் காரியாதிகாரியும் தொண்டர் படையினரும் பிடித்ததாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. உண்மை என்னவென்றால் 2ம் திகதி இரவு 11-20 மணிக்கு செம்பியன்குண்டு இராணுவ முகாமிலிருந்து எமது பெற்றோல் வாகனம் பழைய துறைமுகத்திற்குப் போய் திரும்பி சங்குப்பிட்டித் துறைமுகத்திற்குப் போகும் போது, துறைமுகத்தில் 36 சாக்கு வெங்காயம் இறக்கப்

## 'சேவைகள் தரம் ஒன்று படுத்தல்'

கொழும்பு. வெள்ளி தபால் எழுதுவினைஞர் சேவைக்குக்கிடைத்த சலுகையான 'சேவைகள் தரம் ஒன்று படுத்தல்' திட்டத்தின் போது அஞ்சல் எழுதுவினைஞர் சேவைக்கும் கிடைத்துள்ளது.

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் இடைவிடாத முயற்சியின் காரணமாக இச் சலுகை விரைவில் தமக்கும் கிடைத்துள்ளது என அஞ்சல் திணைக்கள ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

பட்டிருந்தது. மிகுதியை வள்ளத்தில் ஏற்றிக்கொண்டு அக் கரைக்குப் போய்விட்டார்கள். 36 சாக்கு வெங்காயத்தைக் காவல் புரிந்து கொண்டு இருக்கிற சமயம் 24 சிறீ 5 91 கொடி 4 ஆட்களுடன் வந்தது. நாங்கள் ஓட்டியையும் ஆட்களையும் கைப்பற்றி விசாரித்த போது தம்மாருளத்தில் உள்ளார் ஒருவருடையது என்று தெரியவந்தது. 36 சாக்கு வெங்காயத்தையும் ஓட்டியையும் காரியாதிகாரியிடம் கப்டின் நாணயக்கார ஒப்படைத்து பற்றுச் சீட்டும் பெற்றுக்கொண்டார். கப்டின் நாணயக்கார, சார்ஜன் புகாரி, ஐ. எக்ஸ் பெர்னாண்டோ, ஜி. ஏ. வின்சன், எம். எஸ். எம். முத்தார் ஆகிய ஐவருமே இதில் சம்பந்தப்பட்டவர்களாவர்'

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30, இரவு 10-00
எம்.ஜி.ஆர். — ஜெயலலிதா நடித்த
# தாய்க்குத் தலைமகன்

தினசரி 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
# என் தம்பி

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஆராதனாபுகழ் ராஜேஸ்கன்னா நந்தா நடித்த
# த றெயின்
THE TRAIN
[ஹிந்தி ஈஸ்ட்மன்கலர்]

நாகம்ஸ்சினிமா (கன்னாகம்)
தினசரி பி. ப. 4-30
சனி, ஞாயிறு 10-30
THE MOST BEAUTIFUL WOMAN OF THE WORLD
தினசரி, 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
நெஞ்சில் ஓர் ஆலயம்

REGAL Jaffna
Daily 5-15, 7 15 p.m.
Sat-Sundays 10-30 a.m.
Sophia Loren, Marcello Mastroianni in
SUN FLOWER
(Color)
தினசரி பி. ப 2-00, 10-00
ஜெமினி – தேவிகா நாகேஷ் நடித்த
வாழ்க்கைப் படகு
(புதிய கொப்பி)

இன்றுமுதல் குதூகல ஆரம்பம்!
லிடோ வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
காலை 10-00 பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30. தினசரி 3 காட்சிகள். சனி, ஞாயிறு 4 காட்சிகள்
மக்கள்திலகம்
★ எம். ஜி. ஆர்.
கலைச் செல்வி
★ ஜெயலலிதா
★ முத்துராமன் ★ அசோகன்
★ விஜயநிர்மலா ★ கீதாஞ்சலி
★ ரி.கே.பகவதி ★ சோ
★ தேங்காய் சீனிவாசன்
★ சுந்தரிபாய்
நடித்த
# என் அண்ணன்

மனோஹரா— யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
★ ரங்கராவ் ★ சோபன்பாபு ★ வாணிஸ்ரீ
★ விஜயலலிதா ★ ஜோதிலட்சுமி
நடித்த
# துப்பாக்கியே துணை
ஜோதிலட்சுமியின் கவர்ச்சி நடனங்கள், மயிர்க்கூச்செறியும் சண்டைக் காட்சிகள் நிறைந்த துப்பறியும் தீந்தமிழ் சித்திரம்.

ஆரம்ப விழா
ஸ்ரீகாலிங்கன் தியேட்டர் இணுவில்
இன்று [20—11—71 சனிக்கிழமை]
[திறப்புவிழா நேரம் பி. ப. 5-00 மணி]
தினசரி காட்சிகள்: மாலை 6-30 மணி, இரவு 9-30 மணி
★ சிவாஜி ★ பத்மினி ★ சாவித்திரி
★ கே. ஆர். விஜயா ★ தேவிகா
மற்றும்பலர் நடித்த
# சரஸ்வதி சபதம்
புதிய நிருவாகஸ்தரினால்
திருத்தியமைக்கப்பெற்ற நவீன யந்திர சாதனங்களுடன் சினிமாக் விமிகுடெட் தாபனத்தாரின் படங்கள் காண்பிக்கப்படும்.

யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்

★ ஜெய்சங்கர்
★ ரவிச்சந்திரன்
★ காஞ்சனா
★ நாகேஷ்
★ பானுமதி
★ தேங்காய் சீனிவாசன்
நடித்த

# காதல் ஜோதி

சாந்தி சினிமா (சங்கானை)
சனி பி. ப. 4-15
THE TRYGON FACTOR
(Adults Only)
சண்டைப்படம்
மாலை, 6-15, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி-விஜயகுமாரி நடித்த
மனைவி

வெஸ்லி சினிமா (மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
1000 பொய்

# 'தனிமனித சுதந்திரத்தை மறுப்பது சோஷலிஸமாகாது'

## வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கோப்பாய் எம். பி.

கொழும்பு, வெள்ளி

'உண்மையான சோஷலிஸம் என்பது மக்களின் வாழ்க்கை முறையில்தான் இருக்கிறது. சோஷலிஸத்தை மக்களின் வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதன் மூலம் ஏற்படுத்தவேண்டும். ஆட்சிமுறையும், நிர்வாகமுறையும் சட்டமும் தான் சோஷலிஸமல்ல" என்று தமிழரசுக் கட்சியின் கோப்பாய்த்தொகுதிப்பிரதிநிதி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போது கடந்த புதன்கிழமை பேசுகையில் குறிப்பிட்டார்.

'தனிமனிதரைப் பற்றிச் சிந்திக்கக்கூடாதென்றும் சமுதாயத்தைப் பற்றியே சிந்திக்கவேண்டுமென்றும் கூறுகிறார்கள். சமுதாயத்துக்கு முழுமைகொடுத்து தனி மனித சுதந்திரத்தை, உரிமைகளை மறுப்பது சோஷலிஸமாகாது' என்று கூறிய திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் குறிப்பிட்டதாவது:

சர்வாதிகாரத்தினால் உருவாக்கப்படும் சோஷலிஸம் சிறைச்சாலையாகத் தானிருக்கமுடியும். எங்களுடைய நாடு தர்மம், சத்தியம் என்ற அடிப்படையைத் தார்மீகத்தைக் கொண்டது. இந்த நாட்டுக்கு ஸ்டாலின், காஸ்ரோவழி சரிவராது. நாங்கள் இன்னும் சோஷலிஸத்தின் எல்லைப்புறத்தில் தான் சுறண்டிக்கொண்டிருக்கிறோம். உண்மையான சோஷலிஸத்தை ஜனநாயகத்தை மனித அடிப்படையில் உருவாக்கவேண்டும். மக்களின் ஆதரவு இந்த அரசாங்கத்துக்குப் பூரணமாக இருக்கும்போது இதைச் செய்வதற்கு ஏன் தயங்க வேண்டும்?

நாம் ஒரு சோஷலிஸப் பாதையில் செல்வதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பாதையில் தான் நாட்டைச் செலுத்துவதாகச் சொல்கிறது அரசாங்கம் ஆனால் இந்த வரவு-செலவுத்திட்டத்திலோ அரசாங்கத்தின் இதர நடவடிக்கைகளிலோ இதற்கான அறிகுறிகளைக் காணக்கூடியதாகத் தோன்றவில்லை.

அரசாங்கக்கட்சியும்எதிர்க்கட்சியும் ஒருவரை ஒருவர் குறைகூறும் சொல்வதால் எதுவும் கிடைத்துவிடாது. இந்த அரசாங்கம் ஆட்சி பீடத்துக்கு வந்ததும் சோஷலிஸப்பாதையில் சென்று பொருளாதாரத்தை விருத்திசெய்வது மட்டுமல்ல தமிழ்பேசும் மக்களின் உரிமைகளையும் வழங்குமென எதிர்பார்த்தோம். இந்த நம்பிக்கை வீணாகிவிட்டது. இதே நோக்கத்தில்தான் அரசியல் நிர்ணய சபையில் நாம் சில யோசனைகளைக் கொண்டுவந்தபோது அவையும் நிராகரிக்கப்பட்டன.

### ஒட்டிப்பிறந்த இரட்டைக்குழந்தைகள்

இப்பொழுது நாங்கள் விவாதித்துக்கொண்டிருக்கும் வரவு-செலவுத்திட்டம் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் போலிருக்கிறது. இதைச்சத்திரசிகிச்சை செய்தால் பிழைக்குமோ சாகுமோ தெரியவில்லை. ஆமாம் நிதியமைச்சர்சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனைகளில் ஒரு றாத்தல் பாணின் விலை பதினைந்து சதமாக அதிகரிக்கப்பட்டிருந்தது. சீனி பங்கீட்டுமுறையில் கொண்டுவரப்பட்டிருந்தது. இந்த இரு யோசனைகளும் இப்போது வாபஸ் பெறப்பட்டுவிட்டன. முதலில் தெரிவிக்கப்பட்ட யோசனைகளால் அரசாங்கம் எதிர்பார்த்த வருமானத்தை வேறு எந்த வழிகளில் எடுக்கவிருக்கிறதென்பதுபற்றி இதுவரை பதில் இல்லை. புரட்சிவாதிகளின் தலைவர்களைத் தெரிந்தும் அதை மூடுமந்திரமாக வைத்திருப்பதுபோல வாபஸ் பெறப்பட்ட யோசனைகளுக்குப் பதிலாக வருவாய் பெறுவதற்கான யோசனைகளும் மூடுமந்திரமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

### விவியன் குறுக்கீடுமற்றி

இச்சமயத்தில் தெஹிவளை—கல்கிசைப் பிரதிநிதி திருமதி விவியன் பல தடவைகளில் குறுக்கீடு செய்தவே அம்மையார் எவ்வளவுதான் இடையீடு செய்தாலும். எவ்வளவுதான் செய்தாலும் வரவு-செலவுத் திட்டம் திருந்திவிடமாட்டாது என்று திரு கதிரவேலுப்பிள்ளை மரவரி முறை யோசனைபற்றிப் பின்வருமாறு கூறினார்:

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்துவரும் மரவரி முறையை நீக்கிவிட்டு தவறணை முறையைக் கொண்டுவரவிருப்பதாக இத்திட்டத்தில் யோசனை கூறப்பட்டிருக்கிறது. இது ஏற்கக்கூடியதல்ல! தவறணை முறை முதலாளித்துவத்தையே வளர்க்கும். இதனால் சாராயத் தவறணை, கள்ளுத்தவறணை குத்தகைக்காரர்களே இலாபமடைவார்கள். இத்தொழிலில் ஈடுபட்டவர்கள் பாதிக்கப்படுவார்கள். தவறணை முறை சோஷலிஸத்துக்கு மாறானது.

விவசாயக் காணிகளுக்கு மட்டுமல்ல தனிமனிதனுடைய சொத்துக்கும் உச்சவரம்பு விதிக்கவேண்டுமென்று தமிழரசுக் கட்சி கூறிய யோசனையை அரசியல் நிர்ணயசபையில்தான் ஏற்காவிட்டாலும் பின்னராவது அரசாங்கக் கட்சியினர் இதுபற்றிக் கவனத்துக் கெடுத்திருக்கலாமென்றும் திரு கதிரவேலுப்பிள்ளை கூறினார்.

அவசரகால நிலைமையைப் பற்றியும் பத்திரிகைத் தணிக்கை பற்றியும் குறிப்பிட்ட கோப்பாய்ப் பிரதிநிதி 'இதுதானா சோஷலிஸம், இதுதானா சுதந்திரம்?' என்று கேட்டார்.

பயங்கரவாத இயக்கம் பற்றிக் குறிப்பிடுகையில் பதினாயிரத்துக்கு மேற்பட்ட இந்நாட்டின் இளைஞர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்களென்றும் அவர்களுக்கெதிராக யுத்தம் செய்வதற்குத் தயாராவதைவிட அவர்களுடைய தலைவர்களைக் கண்டுபிடித்து அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி அவர்களின் சக்தியையும் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்த முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# பங்கீட்டு பொருட்கள்யாவும் 'சங்கக்கடைகள் மூலமே விநியோகிக்கப்படும்' —திரு. இலங்கரத்ன

கொழும்பு, வியாழன்

பங்கீட்டுப் பொருள்கள் அனைத்தும் கூட்டுறவு சங்கங்கள் மூலமே விநியோகிக்கப்படும். இப்பொழுது உத்தரவு பெற்ற வியாபாரிகள் சுமார் மூவாயிரம்பேர் உள்ளனர். பங்கீட்டுப்புத்தகங்களுக்கு இவர்கள் பொருட்களை கொடுப்பதற்கு இப்பொழுது அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. இதை நிறுத்தி பங்கீட்டுப் புத்தகங்களுக்குப் பொருள்கள் யாவும் கூட்டுறவுச் சங்கங்களிலேயே பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு நான் தீர்மானித்திருக்கிறேன். இதுசம்பந்தமாக ஆட்சிமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை செய்ய உத்தேசித்திருக்கிறேன்".

இவ்வாறு உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன இன்று வரவு-செலவுத் திட்டத்தின்மீது பேசுகையில் அறிவித்தார்:

வரவு-செலவுத்திட்ட விவாதம் இன்று நான்காவது நாளாக நடைபெற்றது. அமைச்சர் இலங்கரத்ன தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:

ஒரு பகுதியினர்மீதுதான் சுமையை ஏற்ற வேண்டுமென நாங்கள் விரும்பவில்லை. எல்லோரும் சுமையைத் தாங்கவேண்டும்.

நிதியமைச்சரின் வரவு-செலவுத்திட்ட யோசனைகள் மந்திரிசபையின் பூரண அங்கீகாரத்தைப் பெற்றது. 1962 ஆம் ஆண்டில் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பதவி துறந்த மரபு பற்றி இங்கு சிலர் பேசினார்கள். இதை எடுத்துக் காட்டுவதற்கு கொழும்பு மத்திய தொகுதி முதலாவது பிரதிநிதி ஒருமணி நேரத்தைச் செலவிட்டார். 1962 ஆம் ஆண்டு நிகழ்ச்சிகளும், இப்போதுள்ள நிலைக்கும் தொடர்பே கிடையாது. இரண்டும் வேறுபட்டவை. திரு. பீலிக்ஸ் மந்திரிசபை செய்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போதைய நிதி அமைச்சர் மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவிரும்பினார்.

எனவே இப்போதைய நிதி அமைச்சர் பதவி துறக்க வேண்டுமென்ற பேச்சுக்கே இடமில்லை. இது பற்றிய விவாதம் பொருத்தமற்றது.

### எதிர்பார்த்தோர் ஏமாந்தனர்

1964ம் ஆண்டு நடந்த நிகழ்ச்சி நடைபெறுமென சிலர் எதிர்பார்த்தனர். அப்படி நடந்திருக்[illegible]வின. ஆர். பி. டி. சில்வாக்கள், சி. பி. டி. சில்வாக்களின் காலம்முடிந்து விட்டன என்பதை இங்கு சொல்லிவைக்க விரும்புகிறேன். இன்றுள்ள உறுப்பினர்கள் மக்கள் நம்பிக்கையைப் பெற்றுவந்தவர்கள். நிர்ப்பந்தங்களுக்கு நாங்கள் பணியமாட்டோம். முன்னைய சம்பவங்கள் மீண்டும் நிகழ்வதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம்.

ஓ. ஜி. எல். எனப்படும் தடையற்ற இறக்குமதியால் இந்த நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் தீங்கு ஏற்பட்டுள்ளது! இதை முன்னைய ஆட்சியினர் கொண்டு வந்தனர். இந்த நாட்டுக்கு எந்தப் பொருளையும் அவசியமானவையோ அவசியமற்றவையோ அவற்றை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனால் எமது கைத்தொழில்கள் வீழ்ச்சி நிலையடைந்தது. இந்த இறக்குமதியாளர்கள் இலங்கையின் வம்சாவழிப் பிரஜைகளல்ல. கௌரவப்பிரஜைகளும் தற்காலிக வாசசை பர்மிட் உள்ளவர்களும் தான் இந்த வர்த்தகர்கள். இவர்கள் கட்சி நிதிக்கும் பணம்

(4-ம் பக்கம் பார்க்க)

# இவர்கள் வாதம்

திரு வி. ஆனந்தசங்கரி அவர்களுடைய (தமிழரசுக்கட்சியா) தலைவர் சிரிக்கச்சொன்னால் சிரிப்பார்கள், அழச்சொன்னால் அழுவார்கள். காலில் விழுந்து கும்பிடச் சொன்னால் கும்பிடுவார்கள்.

திரு வி தர்மலிங்கம்: அவ்வளவு நம்பிக்கை!

ஆனந்தசங்கரி-நம்பிக்கை! சென்ற தேர்தலில் அவருக்கு கிடைத்த வாக்குகளை விட அவருக்கெதிராகக் கிடைத்த வாக்குகளோ அதிகம்.

0 0

ஆனந்தசங்கரி- கிளிநொச்சியில் மகாநாடு வைக்கப் போகிறோம் என்றார்கள்.

தர்மலிங்கம்- வைக்கத்தான் போகிறோம்!

ஆனந்தசங்கரி- ஓ ஓ காலநிலை சரியில்லையென்று ஒத்திவைத்திருக்கிறீர்கள்!

ஆனந்த சங்கரி - தவறான வழியில் சென்ற இளைஞர்களை நல்ல வழியில் செலுத்துவதற்கு கிளிநொச்சி தொகுதியில் புனர்வாழ்வு முகாம் அமைப்பது நன்றல்ல.

தர்மலிங்கம்- இதைக் கிளிநொச்சியில் கூட்டம் வைத்துச் சொல்லுங்கள்.

ஆனந்தசங்கரி- கிளிநொச்சியில் மட்டுமல்ல உடுவிலிலும் சொல்லத் தயாராக இருக்கிறேன்! அங்கு முத்திரை வெளியீட்டு விழாவிலும் பூநகரியிலும் இதை தெளிவாகத்தான்பேசினேன்!

தர்மலிங்கம் - அமைச்சருடன் கூடவந்தது!

ஆனந்தசங்கரி அமைச்சரின் காலைப் பிடிப்பவன் அல்லன். எனது சொந்தத் திறமையால்தான் இங்கு வந்திருக்கிறேன்!

[இவை ஆட்சிமன்றத்தில் வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் தமிழ்க்காங்கிரஸ் தமிழரசுக் கட்சி பிரதிநிதிகளிருவருக்குமிடையில் நடந்த வாதப் பிரதிவாதத்தில் ஒரு பகுதி]

# 'இங்குதான் மக்கள் அதிக சலுகைகளை அனுபவிக்கிறார்கள்' — ஆனந்தசங்கரி

கொழும்பு, வெள்ளி

இதர நாடுகளைவிட இந்நாட்டு மக்கள் பல சலுகைகளை இலவச வசதிகளை ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசமின்றி அனுபவித்து வருகின்றனர். இவை எல்லோருக்கும் தொடர்ந்து அளிக்கப்பட வேண்டியது அவசியம்தானா; வசதி படைத்தவர்களிடமிருந்து இச்செலவுகளுக்குப் பணம் அறவிட்டு வசதியற்றவர்களுக்கு இலவச உதவிகள் அளித்தால் என்ன?

கிளிநொச்சித் தொகுதியின் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரி வரவு-செலவுத் திட்ட விவாதத்தில்பேசுகையில் மேற்கண்டவாறு கேட்டார்.

கல்வி, வைத்திய உதவி, அரிசி ஆகியவை எல்லோருக்கும் இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டியதில்லையென்றும் மக்களை அவர்கள் நிலை, வருமானத்தைக் கொண்டு நான்குபிரிவுகளாகப் பிரித்து இந்த உதவிகளை அளிக்கலாமென்றும் கூறிய திரு. ஆனந்தசங்கரி முதல் பிரிவினருக்கு (வருமானம் மிகக் குறைந்தவர்கள்) இலவசக் கல்வி, இலவச அரிசி, இலவச வைத்திய உதவி அளிக்கலாமென்றும் அடுத்த பிரிவினருக்கு இலவச அரிசியும் இலவச வைத்திய உதவியும் மூன்றாவது பிரிவினருக்கு வைத்தியமும் கல்வியும் அளிக்கலாமென்றும் நான்காவது (வருமானம் அதிகமுள்ளவர்கள்) பிரிவினரிடம் இவை யாவற்றுக்கும் கட்டணம் அறவிடலாமென்றும் யோசனை சொன்னார்.

கடந்த பல ஆண்டு காலமாக முன்னைய ஆட்சியினரால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வு காணும் பொறுப்பு இந்த அரசாங்கத்திடம் சுமத்தப்பட்டிருக்கிறது. இதற்குத் தீர்வு காண்பதற்கு தேசிய நலன்கருதி நாம் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டியது எங்கள் பொறுப்பாகும். இந்தப் பெரும் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வுகாண்பதற்கு நிதியமைச்சர் ஒரு மந்திரவாதியல்ல என்றும் திரு. ஆனந்தசங்கரி கூறினார்.

# 1-ம் எதிரி துவக்கால் சுட்டார்; 2-ம் எதிரி வாளால் வெட்டினர்

## கணவன் கொலை வழக்கில் மனைவி சாட்சியம்

மாணிக்கபுரம், வெள்ளி

"நித்திரையாக இருந்த எனது கணவன் மீது வீட்டுக்குள் புகுந்த முதலாம் எதிரி துவக்கால் சுட்டார். 2-ம் எதிரி வாளால் வெட்டினர்" என்று பிரஸ்தாபத்தை தப்பாக்கிச்சூட்டுக் கொலை வழக்கில் சாட்சியமளித்த இறந்தவரின் மனைவியான தங்கம்மா கூறினார்

வடபகுதியில் பெரும் பரபப்பை ஏற்படுத்திய பிரஸ்தாபத்துக் கொலை வழக்கு விசாரணை மல்லாகம் நீதிபதி திரு. ஏ. சிவானந்தன் முன்னிலையில் ஆரம்பமாகியுள்ளது

பிரஸ்தாபத்தைச் சேர்ந்த செல்லமுத்து கந்தசாமியை இவ்வருடம் ஜூன் மாதம் 11-ம் திகதி துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாகவும் அவரது மனைவியான தங்கம்மாவை வாளால் வெட்டிக் காயப்படுத்தியதாகவும் குற்றம்சாட்டி அதே ஊரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம், செல்லமுத்து தங்கராசா, சிவலிங்கம் குமாரசாமி, சண்முகம் இரத்தினம் ஆகியோர் மீது சங்கானைப் பொலிசாரால் இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது

காலமானவரின் மனைவியான தங்கம்மா தொடர்ந்து சாட்சியத்தில் கூறியதாவது:-

"சம்பவதினம் இரவு 11 மணியளவில் நான் பிள்ளைக்குப் பாலூட்டிக்கொண்டிருந்த சமயம் கணவன் நித்திரையாக இருந்தார். அச்சமயம் 1-ம், 2-ம் 3-ம் எதிரிகள் கதவைத்திறந்து வீட்டினுள் நுழைந்தனர். 1-ம் எதிரி கையில் துவக்குக் காணப்பட்டது. அவர் துவக்கால் எனது கணவனுக்குச் சுட்டார். அச்சமயம் அவர் தலையை நிமிர்த்த 2-ம் எதிரி தம் கையிலிருந்த வாளால் கணவனது தலையை அமுக்கிப் பிடித்து வெட்டினர். 3-ம் எதிரி கையில் தலைக்கும் 4-ம் எதிரி கையில் டோர்ச் லைட்டும் இருந்தன. 4-ம் எதிரி வீட்டுக்குள் வரவில்லை. அவர் வெளியில் நின்றார்

1-ம் எதிரி மீண்டும் எனது கணவனை நோக்கிச் சுட்டார். இதன் பின்பு 3-ம் எதிரி என்னைப் பார்த்து "உன்னை உயிருடன் விட்டால் மற்றவர்களுக்கு இதைச் சொல்லிப்போடுவாய்" என்று கூறி கையில் இருந்த துவக்கால் என் முதுகில் அடித்தார். பின்பு 2-ம் எதிரி வாளால் வெட்டினர். இதன்பின்பு மூன்று பேரும் சென்றுவிட்டனர்.

கொஞ்ச நேரத்தால் எனது சகோதரியான சிவபாக்கியம் வந்தார். அவரிடம் நடந்தவற்றைச் சொன்னேன். பின்பு மயக்கமடைந்துவிட்டேன். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மயக்கம் தெளிந்து பொலிசுக்கு வாக்குமூலம் அளித்தேன்'

இறந்தவரின் மாமியாரான சங்கரப்பிள்ளை பொன்னுவும் சாட்சியமளித்தார்

"சம்பவதினம் நான் மோங்கோலுக்குச் சோலிக்குப் போய்விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் மகள் சிவபாக்கியம் குளறிய சத்தம் கேட்டது. அங்கு போய் விடயத்தை விசாரித்தேன். பின் சம்பவம் நடந்த இடத்துக்குப் போய்ப் பார்த்தேன். மகள் தங்கம்மா மயங்கியிருந்தார். மருமகன் கந்தசாமி இறந்து இருந்தார்" என்று அவர் தமது சாட்சியத்தில் கூறினர்

நீதிபதி அடுத்த மாதம் 2-ம் திகதிக்கு மேல்விசாரணையை ஒத்திவைத்தார்.

1-ம் இரண்டாம் எதிரிகள் சார்பில் அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினமும், 3-ம், 4-ம் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினமும் ஆஜரானர்கள்

## தவறணை முறைக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், சனி

வடக்கில் தவறணைமுறை நல்ல திறமையுடன் அமுல் நடத்தப்படுமானால், கள் குடிப்பவர்களுக்கும், சீவல் தொழிலாளர்களுக்கும் நல்ல பலன் கிடைக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நல்லூர் கிளைத்தலைவர் திரு. எஸ். ஏ. கந்தசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: தவறணைமுறையினால் செயற்கைகள் வியாபாரிகளின் கொட்டம் அடக்கப்படும் என்பது நிச்சயம். இந்த மாற்றங்களை இடம்பெறச்செய்ய உதவியாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய வரவு-செலவுத்திட்டத்தில் நல்ல அம்சங்களை உடையதாக இருப்பினும், பின் சிலமாற்றங்கள் செய்ய வேண்டிய நிலைக்கு அரசாங்கம் வரநேரிட்டதன்மூலம் தொழிலாளரின் எண்ணத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. தொழிலாளரின் கருத்தை 'பட்ஜட்'டுக்கு முன்பே தெரிந்திருந்தால், இப்பிரச்னைகள் தோன்றியிராது.

## கருத்தரங்கு

கொடிகாமம், வெள்ளி

மக்களை நன்கு வரவேற்று மக்களுடன் பழகும் முறையிலேயே வியாபாரத்தின் முன்னேற்றம்பெறுமானும் தங்கியுள்ளது என சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டுறவுக் கருத்தரங்கில் உரையாற்றிய கூட்டுறவுக்கல்லூரி விரிவுரையாளர் திரு ஆர். எம். நாகலிங்கம் கூறினர்.

திரு. க. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நாகலிங்கம் மேலும் தெரிவித்ததாவது!

கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் தம் தொழிலை ஒரு சமூகப் பணியெனவே கருதவேண்டும் என்றும் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் கொடுப்பதையே தான் மக்களுக்கு விநியோகம் செய்யவேண்டுமென்றில்லாமல் மக்களின் தேவை எதுவோ அதைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்றும் கூறினர். இக் கூட்டத்தில் தென்மராட்சிக் காரியாதிகாரி, கூட்டுறவு விரிவுரையாளர்கள் மற்றும் பலர் பேசினர்

## திருட்டு

சங்கானை வெள்ளி

சங்கானையைச் சேர்ந்த திருமதி இரத்தினேஸ்வரி இரத்தினம் என்பவர் வீட்டில் பட்டப்பகலில் இனந்தெரியாதநபர்கள் உட்புகுந்து அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த காப்பு, சங்கிலி, மோதிரம் சுமார் ஆயிரத்தெழுநூறு ரூபா பெறுமதியான தங்கநகைகளையும் ரொக்கப்பணத்தையும் களவாடிச் சென்றுள்ளனர். பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. அல்பிரட் செனவிரத்ன விசாரணை நடத்தினர்.

## கும்பாபிஷேகம்

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு தெற்கு சங்கரநாதர் கோவில் மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 24ம் திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கிறது. ஆலயத் திருப்பணிகள் நிறைவுற்று இம்மாதம் 20ம் திகதி கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகின்றன.

"நொக்கவுட்"

## நாளை ஆட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வந்த உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் இறுதியாட்டம், நாளை மாலை யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் மீண்டும் நடைபெறும்.

இந்த இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் குருநகர் 'பாடும்மீன்' விளையாட்டுக் கழகமும் மோதிக்கொள்கின்றன.

மேற்படி இரு கோஷ்டிகளுக்குமிடையில், கடந்த மாதம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டம், குழப்பத்தில் முடிந்ததைத் தொடர்ந்தே இப்போட்டி நாளை மீண்டும் நடைபெறுகின்றது

## பிரதமரின் கடவுள் பக்தி காப்பாற்றியது

கொழும்பு வெள்ளி

பிரதமரின் கடவுள் நம்பிக்கைதான் கடந்த ஏப்ரலில் நாட்டில் நடைபெற்ற பயங்கரவாத நடவடிக்கை தோல்வி அடைந்ததற்கு முக்கிய காரணமாகும். அவர் உரியநேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுத்ததற்கு நாட்டு மக்களும் நாமும் மிகுந்த கடமைப்பட்டவர்கள் என்று வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது அமைச்சர் பீ இலங்கரத்ன குறிப்பிட்டார்.

## நாளை 10-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், சனி

இலங்கை இலக்கிய ரசிகர் சங்கத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை ஏழாலை வடக்கில் நடைபெறவிருக்கிறது.

திரு. த. நாவேந்தன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் நல்லூர் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. சி. அருளம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## பனம் பொருள்

அம்பன், வெள்ளி

பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள வல்லிபுரக் குறிச்சியில் பனம் பொருளாலான ஊமல், நார் முதலியவற்றிலிருந்து பயனுள்ள பாவனைப் பொருட்களை தயாரிக்கும் கைத்தொழில் நிலையமொன்று அடுத்த ஆண்டு தைமாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வல்லிபுரக் குறிச்சியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளைத் தலைவர் தெரிவித்தார். பயிற்சிக்காக மாணவர்கள் சேர்க்கப்படுவரென்றும் பயிற்சியின் போதும் அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படும் என (தே நி) வும் அவர் தெரிவித்தார்.

## பங்கீட்டு—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்தவர்கள். 1964-ம் ஆண்டுத் தேர்தல் முடிந்ததும் அவர் மாவிலைக்கு முன்னர் சிலர் வந்தது எனக்கு நினைவுக்கு வருகிறது. அவர்கள்தான் போராளிகள்.

ஒரு பக்கத்தில் உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று கூறுகிறோம். அதே சமயம் இறக்குமதிக்கும் அனுமதி வழங்குகிறோம். இறக்குமதி செய்ய அனுமதி பெற்றவர்கள் இந்நாட்டு உற்பத்திப் பொருட்களை அழித்துவிட்டுத் தங்கள் நாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்கிறார்கள். இந்நிலையில் இந்த நாட்டு விவசாயிகள் எப்படி உற்பத்தியை அதிகரிக்க முன்வருவார்கள்.

எனவே இந்த அந்நிய வர்த்தகர்களின் பிடியிலிருந்து நமது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமெனில் வர்த்தகத்துறையை தேசிய மயமாக்குவதுதான் ஒரேவழி!

முன்னைய அரசாங்கம் பெற்ற வெளிநாட்டுக் கடனைத் தீர்ப்பதற்கு நாங்கள் இப்போது கிடைக்கும் செலாவணியைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதென்றும் எமது அடுத்த சந்ததியினரும் இக் கடனைச் செலுத்த நேரக்கூடுமென்றும் அவர் சொன்னார். திரு. இலங்கரத்ன மேலும் பேசுகையில், அரிசி விலை, மாவுவிலை எப்படி காலத்துக்குக் காலம் விலை உயர்ந்ததென்றும் யு. என். பி. அரசாங்கம் தேர்தலுக்குச் சிறிது முன்னர் இந்த விலைகளில் தங்களுக்கு வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையில் மாற்றம் செய்தனரென்றும் சில விபரங்களுடன் எடுத்துக் கூறினர்.

யாழ்ப்பாணம், சனி

இன்றுமாலை அராலி முருகன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அராலி தென்மேற்கு முருகமூர்த்தி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. கூட்டத்திற்கு திரு ஆ. குமாரத்தினம் தலைமை தாங்குகிறார்.





குளிர்மையான, மெந்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள். தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

## மணிவாக்கு

மனத்திலே விபரீதமான எண்ணங்கள் எழாமல் நாம் காத்துக் கொள்ள வேண்டும். யாராவது திடீரென்று 'நீ இப்பொழுது என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டால் உடனே இன்னது என்று பயமின்றிப் பகிரங்கமாகச் சொல்லக்கூடிய விஷயங்களைப்பற்றி மட்டுமே எப்பொழுதும் மனதில் எண்ணும்படி பழக வேண்டும்.

— மார்க்கஸ் அவுரேலியஸ்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 38[illegible]

[illegible] விரோதிகிருது வருஷம் கார்த்திகை மாதம் 4-ந் திகதி (20-11-71)

# சைவ உலகின் நஷ்டம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 15-வது குருமகா சந்நிதானமான ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணி சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மகா சமாதி அடைந்த செய்தி, ஈழம் உள்ளிட்ட சைவ உலகம் அனைத்துக்கும் பெரும் துக்கமளிப்பதாகும். தமிழக இந்து தர்மஸ்தாபன அமைச்சர் கூறியது போல் அப்பெரியார் சைவத்தைப் பரப்பியும், கோயில்களை சிறப்பாக நடத்தி கும்பாபிஷேகங்களைச் செய்தும் அரும் பெருந்தொண்டாற்றியுள்ளார்கள். அவரது மறைவு சைவ உலகத்துக்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும்.

சைவ சித்தாந்தத்தைப் பரப்புவதுடன் தென்னாட்டிலுள்ள பல முக்கிய திருக்கோயில்களை நிர்வகிக்கும் பெரும் பணியில் திருவாவடுதுறை ஆதீனம் முன்னணியில் உள்ளது. ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணியின் ஆட்சியிலே, உள்ள பல கோயில்களிலும் திருப்பணிகளைச் செய்து கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்துள்ளன. கோயில் நிர்வாகம் எவ்விதம் நடைபெற வேண்டுமென்பதற்கு அவர்கள் முன்மாதிரியாக இருந்து காட்டியுள்ளார்கள். தேவார திருமுறை நூல்களை நல்ல முறையில் கருத்துடனே அச்சிட்டு பிரசுரம் செய்தும் சைவ அறிஞர்களை கௌரவித்தும் கலைஞர்களை ஆதரித்தும் நல்லதொண்டாற்றியுள்ளார்கள். சமயத்துக்காக அவர்கள் செய்துள்ள பணிகள் கொஞ்சமன்று.

அவருக்கு அடுத்தபடியாக திருவாவடுதுறை ஆதீனத்தின் 16-வது குருமகா சந்நிதானமாக வந்துள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஈழத்துக்கும் புதியவரல்லர். சென்னையிலுள்ள தர்மபுர ஆதீன பிரசார நிலையத்தின் பொறுப்பை வகித்தபோது, ஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் சுவாமிகள் என்ற பெயரில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேக்கிழார் விழாவிலே தலைமைவகித்து அரிய பிரசங்கம் செய்தார். ஈழத்திலே சுற்றுப்பிரயாணம் செய்து பல இடங்களிலும் சைவ சொற்பொழிவுகளாற்றி பெருந்தொண்டு செய்தார். மறைந்த மகாசந்நிதானமவர்கள் ஈழத்துக்கு வந்து இங்குள்ள ஸ்தலங்களை தரிசிக்க வேண்டுமென்று ஆவல்கொண்டிருந்தார். துரதிஷ்டவசமாக அது நிறைவேற முடியாமற் போயிற்று. அவர் வந்திருப்பின் திருக்கேதீச்சரம் முதலிய திருப்பணிகளுக்குப் பெரும் உதவியாக இருந்திருக்கும். தற்போது ஆதீனத்தின் புதிய அதிபர் ஈழம் வந்து பல ஸ்தலங்களையும் தரிசித்து, இங்கு சைவ சமூகத்தின் சேவைகளையும் நன்கு அறிந்துள்ளதால் அவரது அருளாட்சியிலே, ஈழத்திலுள்ள சைவ சமயப்பணிகளுக்குப்புதிய ஆக்கம் கிடைக்குமென்று நம்புவது மிகையல்ல.

சமய விஷயங்களிலே பொதுமக்களுக்கும் சிறப்பாக வாலிபர்களுக்கும் நம்பிக்கையும் அக்கறையும் குறைந்து வரும் காலம் இது. காரணம், சமூகத்தேவைகளை சமய ஸ்தாபனங்கள் நிறைவும் பூர்த்தி செய்யத் தவறியதுதான். ஆலயம், மடாலயம், சத்திரம் முதலியன தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் இருந்தன. கோயிலுள்ள ஊரிலேயே குடியிருக்க வேண்டுமென்று கூறியதற்குக்காரணம், கோயில்கள் மூலமே சமூகத்துக்குப் பல சேவைகளும் தெய்வத்தின் பெயரால் கிடைக்க முடியுமென்பதால் தான். தமிழ் மன்னர்களின் ஆட்சிமறைந்த பின் கோயில் சொத்துக்களைப்பல பெருச்சாளிகள் சுரண்டின. அதனால் சமூகத்துக்கான நன்மைகள் கிடைக்க முடியாது போகவே கோயில்களிலும் சமய ஸ்தாபனங்களிலும் மக்களுக்குப் பற்றும் நம்பிக்கையும் குறைந்தன. சமூகத்தில் இன்று ஏற்பட்டுள்ள கிளர்ச்சிகளுக்கு இதுவே பெரிதும் காரணமாகும். சைவசமயத்திலும் ஸ்தாபனங்களிலும் சிறப்பாக சைவசமூக வாலிபர்களுக்கு மீண்டும் அக்கறை ஏற்படவேண்டுமாயின், அந்த ஸ்தாபனங்கள் மக்களுக்கு உதவியாக இருக்கவேண்டும், அதற்கான முறையில், திருவாவடுதுறையின் புதிய மகா சந்நிதானம் பணிசெய்யவும் ஈழத்திலும் சைவம் புத்துயிர் பெறவும் வழி பிறக்குமென்று நம்புகிறோம்.

—

ஆசிரியர்கள்

## விளையாட்டிலும் பாண்டித்தியம் பெறவேண்டும்"

பருத்தித்துறை, வெள்ளி

"வளர்ந்து வரும்சமுதாயத்தின் வழிகாட்டிகளாக விளங்கும் ஆசிரியர் ஒழுக்கசீலராகவும், நேர்மைக்கு உரைகல்லாகவும், இலட்சிய புருஷராகவும் வாழவேண்டியது அவசியம். புதிய கல்வித்திட்டத்தில் மாணவரின் அறிவு வளர்ச்சிக்கு மட்டுமன்றி உடல் வளர்ச்சியும் வற்புறுத்தப்படுவதால் ஆசிரியர் விளையாட்டுத் துறையிலும் பாண்டித்தியம் பெறவேண்டியது அவசியம்."

இவ்வாறு வடமாநிலக் கல்வி அதிபதி திரு. டபிள்யூ டி. ஸி. சுமாதத்தில நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற உடற்பயிற்சி ஆசிரியர் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். தேசிய உடற்பயிற்சி போதனாசிரியர் திரு. அர்தனி அபயசிங்கவும் பேசினார்.

[இன்று இஸ்லாமிய பெருமக்கள் கொண்டாடும் றம்ழான் பெருநாளை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது ]

# நேர்வழி காட்டிய நாயகம்

[ஏ. எம். ஏ. அஸீஸ்]

நாங்கள் எமது பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்ததினத்தை விசேஷமாகக் கொண்டாடுகின்றோம். புனித ற உல் அவ்வல் மாதத்தில் நாங்கள் பிரசங்கங்கள் மூலமாகவும் வேறு பிரசாரங்கள் மூலமாகவும் நாயகத்தின் வாழ்க்கையில் பொதிந்துள்ள இலட்சியங்களைச் சிலவற்றை அறியத் தெண்டிக்கிறோம்.

அவை எங்கள் வாழ்க்கையிலும் பிரதிபலிக்குமாறு ஆண்டவனை இரந்தவர்களாய் இருக்கின்றோம். நபிகள் நாயகம் [ஸல்] அவர்களின் புரட்சிகரமான போதனைகளையும் சாதனைகளையும், தங்களுடைய 'ஜாவித்நாமா' என்னும் சிறந்த [illegible] நாயகம். [ஸல்] அவர்களின் பரம விரோதி அபூஜஹில் பேசுவது போன்ற ஒப்புவமையற்ற முறையில் வர்ணித்திருக்கிறார்கள். கவியரசர் அல்லாமா இக்பால் அவர்கள். அபூஜஹில், நாயகத்தால் சுயநலமிகளுக்கு வந்த மோசத்தைச் சுட்டிக்காட்டி பின்வருமாறு கடிந்துரைக்கின்றார்.

'முகம்மது என்ன செய்தார் பார்த்தீர்களா! என் தோழர்களே! உலகத்தாரே! எங்கள் இதயங்களையெல்லாம் அவர் தம் செயல்களால் புண்படுத்திவிட்டார், விக்கிரக பீடமாயிருந்த கஃபாவை அழித்துவிட்டார். சர்வாதிகாரம், சாம்ராஜ்யம் ஆகியவைகளுக்கு முற்றுப்புள்ளிபோட்டுவிட்டார். எங்கள் இளைஞர்களைத் தம் வலையில் திறமையாகச் சிக்கவைத்துவிட்டார். எங்கள் பரம்பரைத் தெய்வங்களாகிய லாத்தையும், மனாத்தையும் துண்டுதுண்டாக்கினார். உலகமே நீ இதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறாயோ? முகம்மது எப்படியானவர் தெரியுமா? அறிவுள்ள பொருட்களை அடியோடு வெறுத்து அழிவிலலாப்பரம்பொருளை அல்லும் பகலும் தேடியவர். இப்பொழுது காணப்படும்சாட்சிகள் நாளைக்கு அழியக்கூடியவை என்ற உண்மையை நிரூபித்தார். தாங்கொண்டுவந்த சாதித்த சன்மார்க்க நெறியால் தேசத்திமிர், சாதித்திமிர் ஆகியவற்றை அடியோடழித்தவர். குறைஷிக் குடும்பமும் அரபுச்சாதியும் என்பன பிற குடும்பங்கள். சாதிகளைப் பார்க்கிலும் மேலல்ல என்பதை வற்புறுத்தியவர். மேன்பட்டவன் எனக்கருதப்படுபவன் கீழ்நிலையில் உள்ளவன் எனப்படுவோனும் சரிசமம் என்பதை வற்புறுத்தியவர். அடிமையோடு ஒன்றுசேர்ந்து உணவருந்தியவர். இத்தகையவரே முகம்மது".

இவ்விதமாக உணர்ச்சி ததும்பும் முறையில் எங்கள் மார்க்கத்தில் விசேஷம் பண்புகளாகிய ஏக தெய்வக் கொள்கையையும் (தௌஹீத்) முஸ்லிம் சகோதரத்துவத்தையும் கவியரசர் அல்லாமா இக்பால் விளக்கியிருக்கிறார்கள். ஏகதெய்வக்கொள்கை தனித்தன்மை பொருந்தியது. ஆண்டவனுக்கு அடிபணிதல் என்பதே இஸ்லாம் என்ற பதத்திற்கு உரியபொருளாகும். வணக்கத்துக்கு பாத்திரமான நாயன் யாருமில்லை, அல்லாஹுத்தஆலாவைத்தவிர எல்லாப் புகழும் அவனுக்கே உரியன. அவன்இணைதுணையற்ற ஏகன். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. ஆக்கவும் அழிக்கவும் வல்லவன் அவனே. நிகரற்ற அன்புடையோனும், அளவற்ற அருளாளனும் அவனேயாவான். இத்தன்மைகளையே இஸ்லாம் எப்பொழுதும் வற்புறுத்துகிறது. முஸ்லிம் சகோதரத்துவத்தைப் பற்றிய பல இடங்களில் எங்கள் நாயகம் (ஸல்) அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். விசேஷமாக இறுதியாகச் செய்த ஹஜ் யாத்திரையின்போது அவர்கள் திருவாய் மலர்ந்தருளியவற்றை இங்கு குறிப்பிடல் வேண்டும். அவர்கள் அவ்வேளையில் பின்வருமாறு கூறினார்கள்.

'எனது மக்களே! கேளுங்கள். ஒவ்வொரு முஸ்லிமும் மற்ற முஸ்லிமின் சகோதரர் முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள் என்பதை மனதில் திட்டமாகப்பதிய வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் சமமானவர்கள். சம உரிமையுடையவர்கள். ஒரே விதமான கடமை செலுத்த வேண்டியவர்கள். ஏக சகோதரத்துவத்தால் பிணைக்கப் பட்ட ஒரு சமுதாயத்தின் அங்கத்தவர்கள் நீங்கள் உங்கள் சகோதரனிடமிருந்து அவர் உங்களுக்குக் கொடுக்காத ஒரு பொருளை எடுப்பது கூடாது. இப் புனிதமான குர்ஆனை உங்களுக்கு நான் விட்டுச் செல்லுகிறேன். இதைத் தவறாது கடைப்பிடித்து நடவுங்கள். இல்லேல் நீங்கள் வழிதப்பிப் போய்விடுங்கள்.''

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே பரிபூரண மனிதர். மனிதர்க்கு வழிகாட்டி மனிதவர்க்கத்தாருக்கு ஒரு நல்ல அன்பு உதாரணர். ஆகவே நாங்கள் மற்றவர்களிலும் நாயகம் (ஸல்) அவர்களையே நேசிக்கவேண்டும். நேசித்து அவர்களின் இருமையை நாடவேண்டும். நாடி ஆண்டவனின் அருளைப் பெறவேண்டும்.

ஓர் உண்மை முஸ்லிம் எத்தகையவனாய் இருக்க வேண்டுமென்பதை அவர் எங்களுக்குக் காட்டிப்போயிருக்கிறார். உண்மை முஸ்லிம் ஆண்டவனைப் புகழ்பவனாயும் அவனுடைய சட்டங்களுக்கு அடிபணிபவனாயும் இருப்பான் அவனது நாவினாலும் கையினாலும் நன்மையே அன்றி உலகத்தாருக்கு வேறொன்றும் விளையாது.

நபிகள்பெருமானார் அவர்களின் வாழ்க்கை கற்பனைக் கட்டுக் கதைகளால் பீடிக்கப்படாமல் சரித்திரபூர்வமான விசேஷத்தன்மை பெற்றது. எங்கள் நபிகள் நாயகம் அவர்கள் சமாதான கர்த்தராய் இருந்தார்கள். ஆனால் சமயம் நேர்ந்த போது போர் முனையிலும் வழிகாட்டக் கூடியவர்களாய் இருந்தார்கள். மன்னர் பதவி வகித்த போதிலும் எளியவாழ்வை மேற்கொண்டார்கள். அனாதையாய் இருந்தார்கள். அண்ணலாய்த் திகழ்ந்தார்கள். எத்தொத்த துறைகளில் எல்லாம் நாயகம் அவர்கள் எமக்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எந்தவாழ்க்கையைத் தம் பூவுலக வாழ்வின் போது அனுஷ்டித்தார்களோ அந்த வாழ்க்கைதான் இஸ்லாமிய வாழ்க்கையாகும் அவ்வாழ்க்கை எங்கள் இலட்சியங்களை மிகுந்த உணர்ச்சியைத் ததும்பச் செய்து நம்பிக்கையுணர்த்தும் இனிதும், அதிரும் ஆனந்தத்தை தரும், இவ்வுன்னத வாழ்க்கையை நாம் நேரான வழியில் சீராக நடாத்த எல்லாம் வல்லநாயன் துணைபுரிவானாக.

நன்றி: 'இலங்கையில் இஸ்லாம்.'

## மரவரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றவு தவறணைகள் கோட்டா திட்டம் அமைத்து பதனீர் சேர்த்து வெல்ல உற்பத்தியும் செய்யலாம். நாட்டில் வெல்லம் தயாரித்தால் சீனி இறக்குமதி குறையும். எனவே வெளிநாட்டு செலாவணி மிஞ்சும்.

கூட்டுறவு கள்ளுத் தவறணைகளை கிராமத்தின் ஒரு மூலையில் நடாத்த வேண்டி ஏற்படும். அங்கு உண்மையான குடிகாரர்கள் செல்வார்கள். மாணவர்கள் ஆசிரியர்கள், பெண்கள், உத்தியோகத்தர்கள் செல்வதால் கௌரவமில்லை என நின்று விடுவார்கள். இதனால் குடிப்பழக்கம் குறையும்.

இப்பொழுது இருக்கும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களே கூட்டுறவு தவறணைகளை ஆரம்பிக்கலாம். எனவே நாட்டு நலன் கருதி எல்லா சமூக சேவா நிறுவனங்களும், மரவரித் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டிருப்பதை பாராட்ட வேண்டும்.

## சீனாவின் மற்றொரு அணுகுண்டு

நியூயோர்க், நவ. 18

கம்யூனிஸ்ட் சீனா நேற்று மேலும் ஒரு அணுகுண்டை காற்று மண்டலத்தில் வெடித்துச் சோதனை நடத்தியிருக்கின்றது.

கொழும்பு கல்யாணி இன்டஸ்றீஸ்
இன்று (20-11-71)
யாழ்ப்பாணத்தில் புதிய அலுமினியம்
தொழிற்சாலை ஒன்றைத் திறந்துவைப்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்
தொடர்புகொள்க:
யோகம் இன்டஸ்றீஸ்
483/1 கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
8156

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம்20-ந்திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.